சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி)

**ம.த.சா.1 நாகராஜ், த/பெ குமரசாமி, வயது.48**

நான் பசிலிக்குட்டை முருகன் கோயிலில் அச்சகராக உள்ளேனா என்றால் தற்காலிக அச்சகராக உள்ளேன். மாதம் மாதம் எனக்கு கோயில் சம்பளம் தருகிறார்களா என்றால் சரிதான். நான் வட்டி தொழிலும் செய்து வருகிறேன் என்றால் தற்போது செய்யவில்லை. 5, 6 வருடங்களுக்கு முன்னர் பாட்னாராக இருந்தபோது செய்துக்கொண்டிருந்தேன். ஓம்முருகா பைனாஸில் யார் யார் பாட்னர் என்றால் (சாட்சியிடம் ஒரு போட்டோ காலண்டரை காட்டி கேள்வி கேட்கப்பட்டது) சாட்சி பாட்னராக இருந்தேன் என்று பதில் அளிக்கிறார். எ.ம.த.சா.1 ல் ஜீவானந்தம் பெயர் இல்லை என்றால் சரிதான். 2016ம் வருடத்திலிருந்து லட்சுமி சரஸ்வதி பைனான்ஸில் புதுபிப்பிதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எம்டியாக இருப்பவரே புதுபித்துக்கொள்வார். என்னுடைய முதல் விசாரணையில் 7 வருடமாக லட்சுமி சரஸ்வதி பைனான்ஸ் 2016 லிருந்து நடந்து வருவதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். 7 வருடம் என்றால் 2023 வரை அந்த பைனான்ஸ் நடந்ததா என்றால் ஆமாம். எதிரி ஜீவானந்தன் என்பவரிடம் எவ்வளவு பணம் கொடுத்து அதற்கு ஆதாரமாக என்ன கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் எதிரியிடம் பணம் வாங்கி விட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

Signature of witness.